## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Civil Procedure)

**<u>அசல் வழக்கு எண்71/2018.</u>**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பெரும்புதூர் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5ம் நாள் .வா.த.சா. 1. குமார் அவர்களுக்கு இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமார் | வயது | : | | |
| த/பெ. | : | சுப்ரமணி | இனம் | : | | |
| கிராமம் | : | | தொழில் | : | | |
| சமயம் | : | | தாலுக்கா | : | | |

**<u>வா.த.சா.1- குறுக்குவிசாரணை விசாரணை</u>**

1. என் இடத்தை காலி செய்து தரும்படி வழக்கை தொடுத்துள்ளேன். வழக்கின் புல எண் தெரியாது. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் தெரியாது. வழக்கு சொத்தின் எல்லை விவரங்கள் தெரியாது. வழக்கு சொத்தின் நான்கு புற அளவுகளின் விவரம் தெரியாது. வழக்கை யார் மீது தொடுத்துள்ளேன் என்றால் சின்னப்பன் என்பவர் மீது தொடுத்துள்ளேன். என் அறிவுரையின் பெயரில் தான் வழக்கை எனது வழக்கறிஞர் வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்து ஆதியில் முனுசாமி நாயக்கர் என்பவரின் சொத்து என்றால் அதன் விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை சண்முகம் என்பரிடமிருந்து கிரயம் பெற்றேன். வழக்கு சொத்து சண்முகத்திற்கு எப்படி வந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. எந்தெந்த ஆவணத்தை கொண்டு நான் கிரயம் பெற்றேன் என்றால் சண்முகம் பெயரில் உள்ள பட்டா, சிட்டா, வரி ரசீது மற்றும் கிரய ஆவணத்தை பரிசீலித்து இடத்தை வாங்கினேன்.

2. சண்முகம் வைத்திருந்த கிரய ஆவணத்தின் அடிப்படையில் தான் எனக்கு கிரயம் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ3 கிரய ஆவணத்தில் பட்டாவின் அடிப்படையில் தான் கிரயம் கொடுத்துள்ளேன் என்ற விவரம் இல்லை என்றால் எனக்கு எழுதப் படிக்க தெரியாது. அதே ஆவணத்தில் 03.11.2003 தேதியிட்ட செட்டில்மெண்டின் அடிப்படையில் தான் சண்முகம் எனக்கு கிரயம் கொடுத்ததாக விவரம் கண்டுள்ளது என்றால் எனக்கு எழுதப்படிக்க தெரியாது. 2003ம் ஆண்டு தனக்கோட்டியம்மாள் சண்முகத்திற்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுக்கும்போது பட்டா சண்முகத்தின் பெயரில் தான் இருந்தது என்றால் அதன் விவரம் எனக்கு தெரியாது. என்னிடம்

காட்டப்படும் வா.த.சா.ஆ1 பட்டா எண்.42 1996ம் ஆண்டே சண்முகத்தின் பெயரில் இருப்பதால் தனக்கோட்டியம்மாள் சண்முகத்திற்கு 2003 ம் ஆண்டு செட்டில்மெண்ட் செய்வதற்கு என்ன காரணம் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது 2 கிரயதாரர்களான சண்முகம் அவர் பெயரில் இருந்த பட்டா எண்.42ஐ மறைத்து செட்டில்மெண்ட் பெயரில் கிரயம் செய்துள்ளார் என்றால் எனக்கு அவர் வைத்திருந்த கிரயப்பத்திரத்தின் அடிப்படையில் தான் கிரயம் செய்துள்ளார். பட்டா எண் 42 போலியான ஆவணம் என்பதால் தான் அதனை மறைத்து எனது பெயரில் கிரயம் செய்துள்ளார் என்றால் அதை நான் மறுக்கிறேன். தனகோட்டியம்மாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்ற விவரம் எனக்கு தெரியாது. தனக்கோட்டியம்மாளுக்கு பாலம்மாள் என்ற பெண்பிள்ளையும், சண்முகம் மற்றும் கோவிந்தசாமி என்ற இருப்பிள்ளைகளும் உள்ளனர் என்றால் அதன் விவரம் எனக்கு தெரியாது. மேற்சொன்ன கோவிந்தசாமி யார் என்ற விவரம் எனக்கு தெரியாது. கோவிந்த சாமியின் மனைவிதான் வழக்கின் முதல் பிரதிவாதி ஈஸ்வரி மற்றும் அவரது மகன் தான் 2ம் பிரதிவாதி கேசவன் என்றால் அதன் விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து சம்மந்தமாக ஏற்கனவே 2009ம் ஆண்டு அசல் வழக்கு எண்.461 என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கின் விவரம் எனக்கு தெரியாது என் வழக்கறிஞருக்கு தான் தெரியும்.

3. மேற்சொன்ன வழக்கை சண்முகத்தின் சகோதரரான கோவிந்தசாமி என்பவர் மீது தான் கொடுக்கபட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனது வழக்கறிஞர் சொல்லிதான் எனக்கு தெரியும். அந்த வழக்கை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்படவில்லை என்றால் அதை நான் மறுக்கிறேன். செய்துள்ளோம். அந்த மேல்முறையீட்டுக்கான ஆவணங்களை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதை நான் மறுக்கிறேன். இது நாள் வரை எந்த வித மேல்முறையீடும் செய்யாமல் அந்த வழக்கை மறைத்து இந்த வழக்கை தொடுத்துள்ளேன் என்றால் அதை நான் மறுக்கிறேன். சண்முகம் பெயரில் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு பட்டா வழங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் அட்டவணையில் கண்டுள்ள விஸ்தீரணமும், பட்டா எண் 42 கண்டுள்ள விஸ்தீரணத்திற்கும், வா.த.சா.ஆ3 கிரய ஆவணத்தில் கண்டுள்ள விஸ்தீரணத்திற்கும் வேறுபாடுகள் உள்ளது என்றால் அதை நான் மறுக்கிறேன். தனக்கோட்டியம்மாள் சண்முகத்திற்கு செட்டில்மெண்ட் செய்தபோது எந்த ஆவணங்களின் அடிப்படையில் செட்டில் மெண்ட் செய்தார் என்றால் அதன் விவரம் எனக்கு தெரியாது. எனது சாட்சியத்தில் சண்முகம் பெயரில் வீட்டு வரி ரசீது உள்ளதாக கூறி இருக்கும் பட்சத்தில் என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ3 ல் கட்டிடம் ஏதும் இல்லை என்றால் அதை நான்

மறுக்கிறேன். கொட்டகை இருந்தது. அந்த வீட்டு வரி ரசீதினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். வா.த.சா.ஆ2ல் கூட காலிமனை என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றால் அதன் விவரம் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ1 பட்டா தோராய பட்டா என்றால் அதன் விவரம் எனக்கு தெரியாது. தோராயப்பட்டாவின் அடிப்படையில் கொடுக்கப்படும் தூய பட்டாவின் பெயரில் தான் சுவாதீனம் நிர்ணயிக்கப்படும். அந்த தூயப்பட்டாவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதை நான் மறுக்கிறேன். என்னிடம் கொடுக்கப்பட்ட கிரய ஆவணத்தில் சண்முகம் 2003ம் ஆண்டு எனது தாயார் செட்டில்மெண்ட் செய்த நாளிலிருந்து எனது சுவாதீனத்தில் உள்ள சொத்து கண்டுள்ளது என்றால் அதன் விவரம் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ3ல் கூட விஸ்தீரணத்தின் அளவுகள் இல்லை என்றால் சரிதான். சண்முகம் எந்த காலத்திலும் வழக்கின் சொத்தில் சுவாதினத்தில் இல்லை போலியான பட்டாவின் அடிப்படையில் எனக்கு கிரயம் கொடுத்த ஆவணத்தின் அடிப்படையில் நான் தொடுத்த இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் அதை நான் மறுக்கிறேன். தவறான ஆவணங்களை வருவாய்துறையினரிடம் காட்டி தான் வா.த.சா.ஆ4 நான் பெற்றுள்ளேன் என்றால் அதை நான் மறுக்கிறேன். வழக்கு சொத்தில் சீம கருவேலம் மரங்கள் தான் உள்ளது என்றால் அதை நான் பார்த்ததில்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது தான் வழக்கு சொத்து என்றால் சரிதான். அந்த புகைப்படத்தில் வழக்கு சொத்து காலி மனையாக தான் கண்டுள்ளது என்றால் சரிதான். இந்நீதிமன்றத்தின் அனுமதியுடன் அந்த புகைப்படத்துடன் அடங்கிய குறுந்தகடு **பிரதிவாதி தரப்பு சான்றாவணம் 1 மற்றும் 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(வாதி தரப்பு வழக்கறிஞர் இந்திய சாட்சிய சட்டம் 65 பி பிரிவின் படி முறையான சான்றிதழ் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஏற்ககூடிய ஆவணம் இல்லை என்ற ஆட்சபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)** அப்படியிருக்கும்பட்சத்தில் வீட்டுவரி செலுத்தியதாக நான் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் செல்வாக்கை பயன்படுத்தி வழக்கிற்காக வாங்கப்பட்ட ஆவணம் என்றால் அதை நான் மறுக்கிறேன். என்னிடம் காட்டப்படும் வா.த.சா-ஆ6 சி.எஸ்.ஆர் -இன் புகாரை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகத்தில் இல்லை. அந்த சி.எஸ்.ஆர் -ல் மனுதாரரை அவரது மனையை பார்வையிட கூடாது என்று மிரட்டுவதாகவும் இதை குறித்து விசாரித்து தனது மனையை மீட்டு தருமாறு புகார் கண்டுள்ளது என்றால் சரிதான்.

4. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ11 மற்றும் 12 கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட ஆவணம் என்றால் அதை ஏற்ககூடிய ஆவணம் இல்லை என்றால் அதை நான் மறுக்கிறேன்

மேற்சொன்ன 11 மற்றும் 12 ஆவணங்களில் கூட காலி மனை என்று தான் குறிப்பிட்டுள்ளது கட்டிடங்கள் இல்லை என்றால் அதை நான் மறுக்கிறேன். பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையில் கண்டுள்ள சங்கதிகளை எனது பிராமண வாக்குமூலத்தில் நான் மறுக்கவில்லை என்றால் அதன் விவரங்கள் எனக்கு தெரியாது. முனுசாமி நாயக்கருக்கு கோவிந்தராஜ் மற்றும் நாராயணசாமி என்ற மகன்கள் உள்ள விவரம் எனக்கு தெரியாது . கோவிந்தராஜ் என்பவருக்கு எத்திராஜ் என்ற மகன் உள்ள விவரம் எனக்கு தெரியாது. அந்த எத்திராஜ் தான் தனக்கோட்டியம்மாள் என்பவரின் கணவர் என்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை 1975ம் ஆண்டு எத்திராஜின் மகளான பாலம்மாள் என்பவருக்கு செட்டில்மெண்ட் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. செட்டில்மெண்ட் செய்த நாளிலிருந்து பாலம்மாள் தான் வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால்அதை நான் மறுக்கிறேன். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் தனக்கோட்டியம்மாளின் கணவர் எத்திராஜ் என்பவரும் கையெழுத்து இட்டுள்ளார் என்றால் அதை நான் மறுக்கிறேன். 2009 ம் ஆண்டு தான் பாலம்மாள் மற்றும் வாரிசுகள் சேர்ந்து பிரதிவாதிகள் மீது கிரயம் செய்த விவரம் பற்றி எனக்கு தெரியாது. அந்த கிரய ஆவணத்தில் பாலம்மாள் மற்றும் வாரிசுகள் அனுபவித்து வந்த வீடு கண்டுள்ளது என்றால் அதன் விவரம் எனக்கு தெரியாது. 2022ம் ஆண்டு கேசவன் பெயரில் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரின் பேரில் யாரையும் விசாரிக்கவில்லை. நான் கூறுவது அதே தேதியில் என்னை விசாரித்து நான் சுவாதீனத்தில் இல்லை என்று என்னை திருப்பி அனுப்பி விட்டார்கள் என்றால் அதை நான் மறுக்கிறேன். வழக்கின் உரிமையாளர்கள் பிரதிவாதிகள் நான் கிரய அடிப்படையில் வாங்கிய சொத்து அவர்களை கட்டுப்படுத்தாது என்றால் அதை நான் மறுக்கிறேன். 2009ம் ஆண்டே விவரங்கள் தெரிந்ததால் தான் கோவிந்தசாமியின் பெயரில் நான் வழக்கை தொடுத்தேன் என்றால் அதை நான் மறுக்கிறேன். உண்மையான உரிமையாளர் பிரதிவாதி தான் அவர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் அதை நான் மறுக்கிறேன். ஏற்கனவே 2009ம் ஆண்டு தொடுக்கப்பட்ட வழக்கை மறைத்து தாக்கல் செய்த இவ்வழக்கு Resjudicata - வால் பாதிக்கப்பட்டது என்றால் அதை நான் மறுக்கிறேன். 2018ம் ஆண்டு பிரதிவாதிகள் அமைத்திருந்த குடிசையை நான் அப்புறப்படுத்தினேன் என்றால் அதை நான் மறுக்கிறேன். அது சம்மந்தமாக பிரதிவாதிகள் என்மீது புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனவே விளம்புகை பரிகாரம் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரந்தரஉறுத்துக்கட்டளைக்கான இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் நான் மறுக்கிறேன். வழக்கு சொத்திற்கும் எனக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றால் நான் மறுக்கிறேன்.

5. நீதிமன்ற கட்டணத்திற்காக குறிப்பிட்டுள்ள பிரிவுகள் தவறானவை என்றால் அதை நான் மறுக்கிறேன். வா.த.சா.ஆ13 வில்லங்க சான்றிதழில் பிரதிவாதிகள் முறையே பெற்றவையை மறைத்து நான் அதை பெற்றுள்ளேன் என்றால் அதை நான் மறுக்கிறேன். அந்த ஆவணத்தில் கண்டுள்ள நிபந்தனைகளில் வேறு எந்த விவரங்கள் ஆவது விடுபட்டு இருக்குமாயின் அதற்கு எக்காரணத்தை முன்னிட்டும் இத்துறை பொறுப்பேற்காது என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். எனவே இந்த ஆவணம் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் அதை நான் மறுக்கிறேன். எனவே இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் அதை நான் மறுக்கிறேன்.

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

**(Sd/-.Saranya Selvam.)**
District Munsif,
Sriperumbudur. (FAC)